குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்
முன்னிலை : திருமதி.S.ஷர்மிளா, B.A., B.A.,B.L.(Hons.), L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்
சி.சி.எண்.95/2019

அ.சா.2

2024–ம் ஆண்டு அக்டோபர் 17–ம்தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ரமேஷ் | ஜாதி |
| கணவர் பெயர் | காளியப்பன் | தொழில் |
| கிராமம் | | சமயம் |
| தாலுக்கா | | வயது |

விசாரணை தொடங்கிய நேரம் : மதியம் 12.54 மணி.

Accused A1.Kaliyamurthi, A2.Ramasami Present. Advocate Mr.A.Nagendiran Present for all accused. APP Mr.P.Suresh Present.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. இவ்வழக்கு தொடர்பாக எனது மனைவி இரவு 01.00 மணிக்கு மேல் தகவல் கொடுத்தார். தகவல் கிடைத்தவுடன் நான் சுமார் 15 கி.மீ தூரத்தில் இருந்து சுமார் 1/2 – 1 மணிநேரத்திற்குள் வந்தேன். சம்பவம் நடந்த அன்று இரவே எனக்கு தகவல் கிடைத்த நிலையில் எனது வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் 1 கிமீ இடைவெளி உள்ள அன்று இரவு ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால், வழக்கு சம்பவம் கேள்விப்பட்ட நான் பதட்டமாக இருந்ததால் நான் புகார் கொடுக்கவில்லை. நான் வீட்டிற்கு வந்த பின்பு, காவல் அவசர உதவி எண். 100–க்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரி.

2. வழக்கு புகாரை நான் தான் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். புகாரில் காணாமல் போன நகையின் வடிவம் குறித்து, குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், 5 பவுன் எடைகொண்ட தங்க தாலி செயின் என்று கூறியுள்ளேன். காணாமல் போன தங்க செயின் எந்த கடையில், எப்போ வாங்கப்பட்டது என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரி. மேற்படி நகைக்கான ரசீதை

போலிசார் என்னிடம் கேட்கவில்லை என்றாலும், நானும் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரி.

3. மேற்படி, காணாமல் போன நகையின் ரசீது தற்போது என்னிடம் இல்லை என்றால் சரி. நகையை பறித்துச் சென்ற நபர்களை அக்கம் பக்கம் இருந்தவர்கள் தேடிப்பார்த்தாக எனது முதல் விசாரணையின் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எது மனைவி மட்டும் தான் பார்த்தார். அக்கம்பக்கத்தினர் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்று என்னிடம் கூறினார்கள். சம்பவம் பற்றி எனக்கு செவிவழி செய்தியாகவும் தெரியாது என்றாலும், அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது.

**மறுவிசாரணை : இல்லை.**

விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.04 மணி.

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.